மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

திருக்குறளில் குற்றியலுகரம் இலக்கணத்தின் பயன்பாடு - ஓர் ஆய்வு

A Study on Kutriyalukaram in Thirukkural

Jayaaisree Subramaniam / ஜெயஸ்ரீ சுப்பிரமணியம்[1]

Manonmani Devi M.A.R Annamalai / மனோன்மணி தேவி அண்ணாமலை[2]

[1]Postgraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia

[2]Associate Professor, Faculty of Languages and Communication, Sultan Idris Education University, Malaysia

ஆய்வுச் சுருக்கம்

திருக்குறளில் இடம்பெற்றுள்ள குற்றியலுகரப் பயன்பாட்டினைக் கண்டறிந்தலும் அதனை விளக்குவதுமே இவ்வாய்வின் நோக்கமாகும். தனிநெடிலுக்குப் பிறகும் இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துகளிடைய சொல்லின் இறுதியிலும் வருகிற, கு, சு, டு, து, பு, று என்ற வல்லின மெய்யுடன் சேர்ந்த உகர ஒலிகள் அரை மாத்திரையளவே குற்றியலுகரத்தில் ஒலிக்கும். குற்றியலுகரத்தின் வல்லின மெய்யொலி அதன் ஈற்றயல் (இறுதிக்கு முந்திய) ஒலியன் பாதிப்பால் வேறுபடுகிறது. திருக்குறளில் பொருட்பால் பிரிவில் பதினைந்து குறள்களும் ஆய்வுப் பொருளாகத் தெரிவு செய்யப்பட்டு மேற்கொள்ளப்பட்ட பண்புசார் ஆய்வாகும். இவ்வாய்வு, திருக்குறளில் பயின்று வரும் குற்றியலுகரத்தின் பொருளை அறிந்து கொள்ள துணைப்புரிகிறது.

Date of Submission: 23-06-2025
Date of Acceptance: 25-06-2025
Date of Publication: 30-06-2025
Corresponding Author's Email:
manonmanidevi@fbk.upsi.edu.my

கருச்சொற்கள்: திருக்குறள், குற்றியலுகரம், பொருள்

Abstract

This study investigates the phonological feature known as Kutriyalukaram as it appears in the Thirukkural, a classical Tamil text. Kutriyalukaram refers to the phenomenon wherein the short vowel *u*, when combined with specific hard consonants (namely *k, ch, ṭ, t, p,* and *ṟ*), is articulated with a reduced syllabic duration, typically occurring at the end of olysyllabic words that follow a long syllable. The articulation of the consonant is influenced by the penultimate phoneme, resulting in phonetic variation. This qualitative linguistic analysis is based on fifteen selected couplets from the Porutpaal section of the Thirukkural. The objective is to analyze the contextual usage and phonetic patterns of kutriyalukaram, thereby enhancing the understanding of its role and significance in classical Tamil phonology and poetic expression.

Keywords: kutriyalukaram, Thirukkural, classical Tamil, phonology, Porutpaal, Tamil linguistic

முன்னுரை

உலகிலே காணப்படுகின்ற மொழிகள் பலவற்றுக்கு இல்லாத சிறப்பானது செம்மொழியான தமிழ்மொழிக்கு உண்டு என்பதனை எவரும் மறுப்பதற்கு இல்லை. இத்தகைய மொழிக்குப் பெருமையினைத் தேடிக் கொடுத்த நூல்களுள் திறக்குறளும் ஒன்றாகும். திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று உட்பிரிவுகளும் வாழ்க்கையின் அடித்தளத் தத்துவங்களை உரைத்த பெரும் காவியம் (குணபழனிசிங்கம், மும்தாஜ் & சுரேஸ், 2022). இரண்டடியில் எழுதப்பட்ட திருக்குறள் மிக நுட்பமான பல அரிய கருத்துகளைக் கொண்டது. திருக்குறள் கருத்துகள் அறநெறிகள், வாழ்வியல் நெறிகள், அரசியல் நெறிகள், ஒழுக்க நெறிகள், பொருளியல் நெறிகள், களவியல் நெறிகள், கற்பியல் நெறிகள் என்று வரிசைப்படுத்தக் கூடியவையாய் அமைந்திருகின்றன (சுப்பராயன் & ஜெயகுமார், 2021).

தொடர்ந்து, தொல்காப்பியர் கூற்றுப்படி தமிழில் மொத்தம் மூன்று சார்பெழுத்துகள் உள்ளன. அதில் ஒன்றுதான் குற்றியலுகரம். குற்றியலுகரம் என்பது குறுமை + இயல் + உகரம்> குறு + இயல் + உகரம் > குறு + இயல் + உகரம் = குற்றியலுகரம் என்று புணர்ந்து உருவான சொல். குறுகிய இயல்புடைய உகரம் என்பது இதன் பொருள்.

தனிநெடிலுக்குப் பிறகும் இரண்டுக்கு மேற்பட்ட எழுத்துக்களுடைய சொல்லின் இறுதியிலும் வருகிற, கு, சு, டு, து, பு, று என்ற வல்லின மெய்யுடன் சேர்ந்த உகர ஒலிகள் அரை மாத்திரையளவே ஒலிக்கின்றன. அஃதாவது இயல்பான உகர உயிரின் ஒலிப்பில் பாதியளவே ஒலிக்கின்றன. இதனால் இவை ஒரு மாத்திரை உடைய முழு உகரங்கள் அல்ல என்பதை உணர்த்துவதற்காகக் குற்றியலுகரம் எனப்படுகின்றன. இவை இடஞ்சார்ந்து ஒலிப்பதால் இடஞ்சார்ந்தே அறியப்படுகின்றன. இவற்றுக்குத் தனி வரிவடிவம் இல்லை.

குற்றியலுகரத்தின் வல்லின மெய்யொலி அதன் ஈற்றயல் (இறுதிக்கு முந்திய) ஒலியன் பாதிப்பால் வேறுபடுகிறது. இந்த வேறுபாட்டின் அடிப்படையில் குற்றியலுகரம் ஆறு வகைப்படும்.

வன்றொடர்க்குற்றியலுகரம்

குற்றியலுகரத்துக்கு முந்திய எழுத்து வல்லின மெய்யானால் இந்த வல்லின மெய்யும் இறுதியிலுள்ள வல்லினக் குற்றியலுரமும் சேர்ந்து வன்மையாக ஒலிக்கின்றன. எனவே, வல்லின மெய்யைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் வன்றொடர்க் குற்றியலுகரம் என்று பெயர்பெற்றது. எடுத்துக்காட்டாக, **உப்பு – ப்பு** என வல்லினமெய்யைத் தொடர்ந்ததால் வன்றொடர்க்குற்றியலுகரம்.

மென்றொடர்க்குற்றியலுகரம்

குற்றியலுகரத்துக்கு முந்திய எழுத்து மெல்லின மெய்யானால், இந்த மெல்லின மெய்யும் இறுதியிலுள்ள வல்லினக் குற்றியலுகரமும் சேர்ந்து மென்மையாக ஒலிக்கின்றன. எனவே, மெல்லின மெய்யைத் தொடர்ந்து வரும் குற்றியலுகரம் மென்றொடர்க் குற்றியலுகரம் என்று பெயர்பெற்றது. எடுத்துக்காட்டாக, **பந்து – ந்து** என மெல்லின மெய்யைத் தொடர்ந்ததால் மென்றொடர்க்குற்றியலுகரம்.

இடைத்தொடர்க் குற்றியலுகரம்

குற்றியலுகரத்திற்கு முந்திய எழுத்து இடையின மெய்யானால், இந்த இடையின மெய்யும் இறுதியிலுள்ள வல்லினக் குற்றியலுகரமும் சேர்ந்து வன்மை குறைந்து ஒலிக்கின்றன. எனவே, இடையின மெய்யைத் தொடர்ந்துவரும் குற்றியலுகரம் இடைத்தொடர்க் குற்றியலுகரம் என்று பெயர்ப்பெற்றது. எடுத்துக்காட்டாக, **அமிழ்து-ழ்து** என இடையினமெய்யைத் தொடர்ந்ததால் இடைத்தொடர்க்குற்றியலுகரம்.

உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

குற்றியலுகரத்துக்கு முந்திய எழுத்து உயிர்மெய்யானால் இந்த உயிர்மெய்யிலுள்ள உயிரும் வல்லினக் குற்றியலுகரமும் சேர்ந்து வன்மை குறைந்து ஒலிக்கின்றன. இங்கு ஈற்றயலாக வருவது உயிர்மெய் என்றாலும் அதிலுள்ள உயிரே குற்றியலுகரத்துக்கு முந்தியதாகிறது. எடுத்துக்காட்டாக, **(மரபு + ர(ர்அ)பு)** என உயிரைத் தொடர்ந்ததால் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்.

நெடிற்றொடர்க் குற்றியலுகரம்

குற்றியலுகரத்துக்கு முந்திய எழுத்துத் தனிநெடிலானால், அஃது உயிர் என்பதைவிட, நெடில் என்பதே கருதப்படும். ஈற்றயலாக வரும் நெடில், உயிராகவோ உயிர்மெய்யாகவே இருக்கலாம். இந்த நெடிலில், குற்றியலுகரத்துக்கு முந்தியிருப்பது உயிர் என்பதால் இஃது உயிர்த்தொடர்க் குற்றியலுகரமாகக் கொள்ளப்பட வேண்டியதேயாகும். ஆயினும், இந்தச் சொல் இரண்டே எழுத்துகளைக் கொண்டதாய் இருப்பதால், இதன் ஈற்றிலுள்ள உகரம் குற்றியலுகரமாக ஒலிப்பதற்குக் காரணமாக அமைவதே, அதற்கு முந்தியிருக்கும் உயிர், நெடிலாக இருப்பதுதான். எடுத்துக்காட்டாக, **காடு – டு** தனிநெடிலுக்குப் பின் வந்ததால் இது நெடிற்றொடர்க் குற்றியலுகரம்.

ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்

குற்றியலுகரத்துக்கு முந்திய எழுத்து, ஆய்த எழுத்தானால், இந்த ஆய்தமும் இறுதியிலுள்ள வல்லினக் குற்றியலுகரமும் சேர்ந்து வன்மை குறைந்து ஒலிக்கின்றன. எனவே, ஆய்தத்தைத் தொடர்ந்துவரும் குற்றியலுகரம் ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம் என்று பெயர்ப்பெற்றது. எடுத்துக்காட்டாக, **எஃகு – கு** என ஆய்தத்தைத் தொடர்ந்ததால் ஆய்தத்தொடர்க் குற்றியலுகரம்.

ஆய்வு வரையறை

திருக்குறளில் இடம்பெற்றுள்ள குற்றியலுகரம் பயன்பாட்டினைக் கண்டறிந்தலும் அதனை விளக்குவதுமே இவ்வாய்வின் நோக்கமாகும். இவ்வாய்வானது திருக்குறளை அடிப்படையாக கொண்டுள்ளதால் திருக்குறளின் ஒரு பிரிவான பொருட்பாலைத் தொடர்புள்ள குறள்களை மட்டுமே உட்படுத்தி ஆராயப்பட்டுள்ளது.

ஆய்விலக்கிய மீள்நோக்கு

திருக்குறளில் இலக்கணக்கூறுகள் குறித்துச் சில ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள.

சீனிவாசன் சந்திரன், மனோன்மணி தேவி அண்ணாமலை (2024), ‘திருக்குறள்களில் உம் இடைச்சொல்லின் பொருள் பயன்பாடு’ என்ற ஆய்வில் உம் இடைச்சொல்லின் பயன்பாட்டை ஆராய்ந்துள்ளனர். தொடர்ந்து, தர்மலிங்கம் (2023), ‘திருக்குறளில் புதிய உவம உருபுகள்’ என்னும் ஆய்வில், தொல்காப்பியர் குறிப்பிட்ட 36 உவம உருபுகள் தவிர்த்து உள்ள பிற உவம உருபுகள் திருக்குறளில் இருக்கிறாதா என்பதை ஆய்ந்துள்ளார். மேலும், நவீன் கணேசன், சரண் சுக்லாம் ஆத்மலிங்கம் (2023), ‘திருக்குறளில் இடம்பெறும் ஒடு, ஓடு உருபின் பயன்பாடு’ என்ற ஆய்வில் ஒடு, ஓடு உருபு எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை ஆராய்ந்துள்ளனர். தொடர்ந்து, கார்த்திகைச்செல்வி (2019), ‘திருக்குறளில் சொல்இலக்கணக் கோட்பாடுகள்’ என்ற தலைப்பில் ஆய்வு செய்துள்ளார். அடுத்ததாக, அனிதா, சுபலாலிதா (2016), ‘திருக்குறளுக்கான உரைநடை பகுப்பாய்வை உருவாக்குதல்’ என்ற ஆய்வை மேற்கொண்டுள்ளனர். தொடர்ந்து, சரவணன் (2015), ‘திருக்குறளில் தன்மை விகுதிகள் – மொழியியல் பார்வை என்ற ஆய்வில் தன்மை விகுதிகள் எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது ஆராய்ந்துள்ளார். இதனை அடுத்து, துரையரசன்(2013), ‘திருக்குறளில் அணி இலக்கணக் கூறுகள்’ என்ற ஆய்வை படைத்துள்ளார். திருக்குறளில் குற்றியலுகரம் என்ற இலக்கணத்தைக் கொண்டு ஆய்வுகள் நடத்தப்படவில்லை.

ஆய்வு நெறிமுறை

இந்த ஆய்வானது பண்புசார் முறையில் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வாகும். இவ்வாய்வுக்குத் திருக்குறளின் இரண்டாம் பிரிவான பொருட்பால் உட்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தேர்ந்தெடுக்கப்பட்ட 15 அதிகாரங்களில் 15 குறள்கள் மட்டுமே குற்றியலுகரத்தை ஏற்று வந்துள்ளன. எனவே, தரவுகள் முழுமையாகச் சேகரிக்கப்பட்டு இவ்வாய்வில் ஆராயப்பட்டுள்ளது.

ஆய்வுக் கண்டுபிடிப்பு

I. **வன்றொடர்க் குற்றியலுகரம்**

படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு

(குறள் : 381, இறைமாட்சி, பொருட்பால்)

அமைச்சு – ச்சு என வல்லினமெய்யைத் தொடர்ந்ததால் வன்றொடர்க் குற்றியலுகரம்.

நட்பு – ட்பு என வேறு வல்லின மெய்யைத் தொடர்ந்த வன்றொடர்க் குற்றியலுகரம்.

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து

(குறள் : 398, கல்வி, பொருட்பால்)

ஏமாப்பு, உடைத்து – ப்பு, த்து என வல்லினமெய்யைத் தொடர்ந்ததால் வன்றொடர்க் குற்றியலுகரம்.

ஒருவற்கு - **ற்கு** என வேறு வல்லின மெய்யைத் தொடர்ந்த வன்றொடர்க் குற்றியலுகரம்.

இழுக்கல் உடையுழி ஊற்றுக்கோல் அற்றே
ஒழுக்கம் உடையார்வாய்ச் சொல்

(குறள்: 415, கேள்வி, பொருட்பால்)

ஊ**ற்று**க்கோல் **– ற்று** என வல்லினமெய்யைத் தொடர்ந்ததால் வன்றொடர்க் குற்றியலுகரம்.

மனத்து உளதுபோலக் காட்டி ஒருவற்கு
இனத்துஉள தாகும் அறிவு

(குறள் : 454, சிற்றினம் சேராமை, பொருட்பால்)

மன**த்து, இனத்து - த்து** என வல்லினமெய்யைத் தொடர்ந்ததால் வன்றொடர்க் குற்றியலுகரம்.

ஒருவ**ற்கு - ற்கு** என வேறு வல்லின மெய்யைத் தொடர்ந்த வன்றொடர்க் குற்றியலுகரம்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள குறள்களில் வல்லின மெய்யைத் தொடர்ந்து **கு, சு, டு, து, பு, று** என்னும் எழுத்துகள் வந்ததால் வன்றொடர்க் குற்றியலுகரமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

II. மென்றொடர்க் குற்றியலுகரம்

பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன்று அன்று

(குறள்: 438, குற்றம் கடிதல், பொருட்பால்)

தொன்று, அன்று – ன்று என மெல்லின மெய்யைத் தொடர்ந்ததால் மென்றொடர்க் குற்றியலுகரம்.

தெளிவு இலதனைத் தொடங்கார் இளிவுஎன்னும்
ஏதப்பாடு அஞ்சு பவர்

(குறள்: 464, தெரிந்து செயல்வகை, பொருட்பால்)

அஞ்சு – ஞ்சு என மெல்லின மெய்யைத் தொடர்ந்ததால் மென்றொடர்க் குற்றியலுகரம்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள குறள்களில் மெல்லின மெய்யைத் தொடர்ந்து **கு, சு, டு, து, பு, று** என்னும் எழுத்துகள் வந்ததால் மென்றொடர்க் குற்றியலுகரமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

III. இடைத்தொடர்க் குற்றியலுகரம்

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப் படும்

(குறள்: 388, இறைமாட்சி, பொருட்பால்)

செய்து – ய்து என இடையினமெய்யைத் தொடர்ந்ததால் இடைத்தொடர்க் குற்றியலுகரம்.

செவிக்குணவு இல்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்

(குறள்: 412, கேள்வி, பொருட்பால்)

போழ்து – ழ்து என இடையினமெய்யைத் தொடர்ந்ததால் இடைத்தொடர்க் குற்றியலுகரம்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள குறள்களில் இடையின மெய்யைத் தொடர்ந்து **கு, சு, டு, து, பு, று** என்னும் எழுத்துகள் வந்ததால் இடைத்தொடர்க் குற்றியலுகரமாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

IV. உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்

உலகம் தமீஇயது ஒட்பம்; மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு

(குறள்: 425, அறிவு உடைமை, பொருட்பால்)

இயது – ய்அது என உயிரைத் தொடர்ந்ததால் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்.

இல்லது – ல்அது என உயிரைத் தொடர்ந்ததால் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்.

எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு

(குறள்: 426, அறிவு உடைமை, பொருட்பால்)

எவ்வது, அவ்வது, உறைவது – வ்அது என உயிரைத் தொடர்ந்ததால் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்.

இந்த இரண்டு குறளும் உயிரைத் தொடர்ந்து வந்ததால் உயிர்த்தொடர்க் குற்றியலுகரம் என்று பெயர்ப்பெற்றது.

V. நெடிற்றொடர்க் குற்றியலுகரம்

கேடுஇல் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு;
மாடுஅல்ல மற்றை யவை

(குறள்: 400, கல்வி, பொருட்பால்)

கேடு, மாடு – டு, தனிநெடிலுக்குப்பின் வந்ததால் இது நெடிற்றொடர்க் குற்றியலுகரம்.

வகையறச் சூழாது எழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோர் ஆறு

(குறள்: 465, தெரிந்து செயல்வகை, பொருட்பால்)

ஆறு - று, தனிநெடிலுக்குப்பின் வந்ததால் இது நெடிற்றொடர்க் குற்றியலுகரம்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள குறள்களில் இரண்டு எழுத்துச் சொல்லின் இறுதியில் கு, சு, டு, து, பு, று என்ற உகரங்கள் இருக்க அதற்கு முந்திய எழுத்து நெடிலாக இருப்பின், அது நெடில் என்பது மட்டுமே கருதப்படும்.

VI. ஆய்தத் தொடர்க் குற்றியலுகரம்

கற்றிலன் ஆயினும் கேட்க அஃதொருவற்கு

ஒற்கத்தின் ஊற்றாம் துணை

(குறள்: 414, கேள்வி, பொருட்பால்)

அஃதொருவற்கு – அஃது + ஒருவருக்கு

து எனும் குற்றியலுகரச் சொல்லுக்கு முன் எழுத்தாக ஃ வந்திருப்பதால், இஃது ஆய்தத் தொடர்க் குற்றியலுகரமாகும்.

அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்

அஃதுஅறி கல்லா தவர்

(குறள்: 427, அறிவு உடைமை, பொருட்பால்)

அஃது – து என ஆய்தத்தைத் தொடர்ந்ததால் ஆய்தத்தொடர்க்குற்றியலுகரம்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள குறள்களில் ஆய்த மெய்யைத் தொடர்ந்து **கு, சு, டு, து, பு, று** என்னும் எழுத்துகள் வந்ததால் ஆய்தத்தொடர்க் குற்றியலுகரமாகக் கண்டறியப்பட்டுள்ளது.

முடிவுரை

திருவள்ளுவரால் இயற்றப்பட்ட திருக்குறள் எனும் நூலானது உலகப்புகழ் பெற்றதாகக் கருதப்படுகிறது. இந்நூல் மனித வாழ்க்கைக்குச் சிறந்த கருத்துகளை உள்ளடக்கிய நூலாக மட்டுமல்லாமல், பல இலக்கணக் கூறுகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன என்பதனை அறிய முடிகிறது. இவ்வாய்வில் திருக்குறளின் குற்றியலுகரச் சொற்களின் பயன்பாடு கண்டறியப்பட்டு, விளக்கப்படுத்தப்பட்டுள்ளது. திருக்குறளில் இடம்பெற்றுள்ள 1330 குறள்கள், 3 அதிகாரமாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றுள், பொருளியலில் 15 குறள்கள் மட்டும் தேர்தெடுக்கப்பட்டு, இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்தப் பதினைந்து குறள்களிலும் குற்றியலுகரச் சொற்கள் மிகவும் அழகாகக் கையாளப்பட்டுள்ளது. மேலும், இவ்வாய்வில் குற்றியலுகரம் பயன்பாடு பற்றிய விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. குறள்களுக்கு அழகைச் சேர்ப்பது போல் இந்தக் குற்றியலுகரச் சொற்கள் பயன்பாடு அமைந்துள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது. எனவே, இலக்கியங்களையும் இலக்கணங்களையும் நம் இரு கண்களுக்கு ஒப்பாகக் கருதி, முறையாகக் கற்று மொழியறிவை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

துணைநூற்பட்டியல்

Anita.R, Subalalitha.C.N. Building Discourse Parser for Thirukkural (2016). Department of Computer Science and Engineering, SRM Institute of Science and Technology, https://aclanthology.org/2019.icon-1.3/?utm_source.com

Duraiarasan. K (2013). Thirukkuralil Ani Ilakana Kuuru, https://duraiarasan.blogspot.com/2013/01/blogpost_26.html?utm_source.com

Karthigaiselvi. P (2019). Thirukuralil Solilakanam Kotpadugal, https://mkuniversity.ac.in/research/SYNOPSIS/P3536s.pdf?utm_source.com

Navin Ganeson, Sharan Suklam Athma Lingam. The usage of O□u, □□u Urupu found in Thirukkuralm. (2023). Indian Journal of Tamil, 4(1) 13-19. https://www.researchgate.net/publication/368645706_The_usage_of_Otu_Otu_Urupu_found_in_Thirukkural_tirukkuralil_itamperum_otu_otu_urupin_payanpatu

Saravanan, S. Thirukkuralil Tanmai Vikutikal (2015). International Journal of Linguistics and Computational Applications (IJLCA), 2(3), 73 – 77.

Satheesh. (2018, August 29). திருக்குறள். Dheivegam https://dheivegam.com/thirukkural-tamil/

Seeniwasan Sandran, Manonmani Devi M.A.R Annamalai. A Study on The Usage of “Um” Particle’s Defining Functions in Thirukkural. (2024). Malaysia Journal of Tamil, 2(2) 1-5. View of A Study on The Usage of ‘Um’ Particle’s Defining Functions in Thirukku□al

Seeni Naina Mohamed,S (2015). Nallatamizh ilakkanam (Tamil Grammar), Ungalkural Enterprise, Penang.

Tharmalingam, T. New Parables in Thirukkural. (2023). Shanlax Internatinal Journal Tamil Research, 8(2), 108-114. https://shanlaxjournals.in/journals/index.php/tamil/article/view/6684/6319